# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1948/59 - 2016 ජනවාරි මස 08 වැනි සිකුරාදා - 2016.01.08

*1948/59 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், இக்கட்டளை மூலம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இலங்கை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைத் தாபிக்கின்றதும், அக்கட்டளை மேற்கூறப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றாகக் கருதப்படுவதுமான (2014, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 1859/8 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான), கட்டளைக்கான அட்டவணையை, அதன் நிரல் I இலும் நிரல் II இலும் அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்ற “மருத்துவ விஞ்ஞான பீடம்” என்ற பதிவை உடனடுத்துப் பின்வருவதனை இடுவதன் மூலம் திருத்துகின்றேன் :-*

| *“நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| தொழில்நுட்ப பீடம் | 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கைத் துறை<br>2. உயிரியல் தொகுதித் தொழில்நுட்பக் கற்கைத் துறை<br>3. பொறியியல் தொழில்நுட்பக் கற்கைத் துறை |
| பொறியியல் பீடம் | 1. சிவில் பொறியியல் கற்கைத் துறை<br>2. கணினி பொறியியல் கற்கைத் துறை<br>3. மின் மற்றும் இலத்திரனியல் கற்கைத் துறை<br>4. இயந்திர பொறியியல் கற்கைத் துறை<br>5. பாடங்களுக்கிடையிலான கற்கைத் துறை”. |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2016, சனவரி 07.*

*1- 899*




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*